## 30.5 ஊரக மருந்தகங்களின் செயல்பாடு குறித்து கணிப்பாய்வு செய்தல், காலிப்பணியிடங்களை நிரப்புதல் மற்றும் ஊரக மருத்துவ அலுவலர்கள் பெறத் தகுதியுடைய இதர பயன்கள்

ஊரக வளர்ச்சி (இ5) துறை

அரசாணை (நிலை) எண். 250 நாள் : 14.09.2000

படிக்க :

1. அரசாணை (நிலை) எண். 16, ஊ.வ.துறை, நாள்–29.1.98.
2. உள்ளாட்சி நிதி தணிக்கை இயக்குநரின் கடிதம் ந.க.எண்.30740/99/ஓ1, நாள்–30.5.99.
3. உள்ளாட்சி நிதி தணிக்கை இயக்குநரின் கடிதம் ந.க.எண்.18503/ஈ3/97, நாள்–29.07.99
4. அரசுக் கடிதம் எண். 29161/இ5/98–12, ஊரக வளர்ச்சித் துறை நாள்–27.9.99
5. ஊரக வளர்ச்சி இயக்குநரின் கடிதம் ந.க.எண்.106744/98/ஈ3, நாள்–29.1.2000

**ஆணை**

ஊராட்சி ஒன்றியங்களின் கட்டுப்பாட்டில் பகுதி நேர ஊரக மருந்தகங்கள் முறையான (முழு நேர) மருந்தகங்கள் என இருவகை மருந்தகங்கள் உள்ளன. பகுதிநேர ஊரக மருந்தகங்களில் பி1, பி2, சி பதிவு பெற்ற பரம்பரை வைத்தியர்கள் மதிப்பூதிய அடிப்படையிலும், முறையான மருந்தகங்களில் மருத்துவ பட்டம் பெற்ற மருத்துவர்கள் ஏற்ற முறை ஊதிய விகித அடிப்படையிலும் நியமனம் செய்யப்பட்டு வந்தனர். ஊராட்சி ஒன்றிய பகுதி நேர ஊரக மருத்துவ அலுவலர்களுக்கு 01.10.1984 முதல் ரூ.780–35–1025–40–1385/– என்ற ஊதிய விகிதத்திலும் 01.06.1988 முதல் ரூ.1820–60–2300–75–3200/– என்ற ஊதிய விகிதத்திலும் ஊதியம் வழங்க சென்னை உயர் நீதி மன்ற உத்தரவின் அடிப்படையில் படிக்கப்பட்ட அரசாணை ஒன்றில் ஆணையிடப்பட்டது. அந்த அரசாணைப்படி ஊதிய விகிதத்தில் ஊதியம் வழங்கப்பட்ட 342 பகுதி நேர ஊரக மருத்துவ அலுவலர் பணியிடங்கள் ஊராட்சி ஒன்றியங்களில் உள்ளன என்றும், தற்பொழுது அவற்றில் 93 காலியாக உள்ளன என்றும், பணிபுரிவோரில் 112 பேர் மருத்துவ பட்டம் அல்லது பட்டயம் பெற்றவர்கள் என்றும் 108 பேர் பி2 பதிவு பெற்ற வைத்தியர்கள் என்றும் ஏனையோர் பத்தாம் வகுப்பு அல்லது அதற்கு குறைவாக கல்வி பயின்றவர்கள் என்றும் ஊரக வளர்ச்சி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

2. ஊரக மருந்தகங்கள் தொடர்ந்து பகுதி நேர மருந்தகங்களாகவே செயல்படலாமா ? காலியாக உள்ள ஊரக மருத்துவ அலுவலர் பணியிடங்களை நிரப்பலாமா ? முறையான பணியமைப்பின்பாற்பட்ட பணியாளர்கள் பெறும் இதர பயன்களை ஊரக மருத்துவ அலுவலர்களுக்கு அளிக்கலாமா ? ஊரக மருத்துவ அலுவலர்களின் அலுவல் நேரம் பொறுப்புகள் என்ன ? என்பன போன்ற ஐயப்பாடுகள் எழுந்து, அது தொடர்பாக அரசின் ஆணைகளும் தெளிவுரைகளும் கோரப்பட்டுள்ளன. மேலும் ஊராட்சி ஒன்றிய முறையான மருந்தகங்களில் பணிபுரியும் மருத்துவ பட்டதாரி, மருத்துவ அலுவலர்கள் பட்டமேற்படிப்புக்கு சென்றால் பட்டமேற்படிப்பு காலத்திற்கு முழு ஊதியம் பெற தகுதி உடையவர்களா அல்லது உதவித் தொகை பெற தகுதியுடைவர்களா என்றும் ஐயப்பாடு எழுந்து அரசின் ஆணை கோரப்பட்டுள்ளது.

3. அரசு இவை குறித்து ஊரக வளர்ச்சி இயக்குநர் மற்றும் உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநர் ஆகியோருடன் கலந்து நன்கு ஆய்வு செய்த பின் கீழ்க்கண்டவாறு ஆணையிடப்படுகின்றது.

அ) அரசு மருந்தகங்கள் தொடங்குவதற்கான மக்கள் தொகை மற்றும் தூரம், அடிப்படை விதிமுறைகள் (Norms) மக்கள் நல்வாழ்வுத் துறையில் உள்ளன. ஊராட்சி ஒன்றிய மருந்தகங்களின் செயல்பாடு குறித்து இதுவரை கணிப்பாய்வு ஏதும் செய்யப்பட வில்லை. எனவே தற்போதுள்ள ஊராட்சி ஒன்றிய மருந்தகங்களின் தேவை அவைகளின் செயல்பாடு குறித்து விரிவான கணிப்பாய்வு செய்ய ஊரக வளர்ச்சி இயக்குநருக்கு ஆணையிடப்படுகிறது. அவ்விதம் கணிப்பாய்வு செய்து அரசு முடிவுகள் எடுக்கப்படும் வரை ஊராட்சி ஒன்றியங்கள் புதியதாக ஊரக மருந்தகங்கள் ஏற்படுத்துவதையும், மருந்தகங்களில் பணியிடங்கள் ஏற்படுத்துவதையும் தடை செய்யப்படுகின்றது.

ஆ) தமிழகத்தில் முழுநேர ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் துணை சுகார நிலையங்கள் உள்ளிட்ட மருத்துவ வசதி அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் உள்ள நிலையில் தற்பொழுது இருக்கும் ஊராட்சி ஒன்றிய ஊரக மருந்தகங்கள் தொடர்ந்து பகுதி நேர மருந்தகங்களாகவே செயல்பட வேண்டும்.

இ) காலியாக உள்ள / காலி ஏற்படும் ஊரக மருத்துவ அலுவலர் பணியிடங்களில் பகுதி நேர ஊரக மருத்துவ அலுவலர்களை மட்டுமே ஊராட்சி ஒன்றியங்கள் நியமனக் குழு மூலம் நியமனம் செய்யலாம். நியமனக் குழு பகுதி நேர ஊரக மருத்துவ அலுவலர் பதவிக்கான நபரை தேர்வு செய்ய மாவட்ட அளவிலான மக்கள்

நல்வாழ்வுத் துறை மருத்துவ அலுவலரின் அறிவுரை சேவையை (அரசாணை (நிலை) எண்.99, ஊரக வளர்ச்சித் துறை, நாள்– பத்தி எண். 2ல் உள்ள நடைமுறைப்படி) பெற வேண்டும்.

ஈ) ஊரக மருத்துவ அலுவலர் பணியிடங்களில் தற்பொழுது மருத்துவப் பட்டம், பட்டயம், பி1, பி2, சி வகை பதிவு பெற்ற வைத்தியர்கள் போன்ற பலவித கல்வித் தகுதி பெற்றவர்கள் பணியாற்றி வருகின்றனர். இவர்கள் அனைவரும் பகுதி நேர ஊரக மருத்துவ அலுவலர்கள் என்ற ஒரே வகையினை சார்ந்த ஒரே மாதிரி பணியினை செய்யும் பணியாளர்கள் ஆவார்கள். எனவே கல்வித் தகுதியின் அடிப்படையில் வேறுபாடு காட்டாமல் இவர்கள் அனைவருக்கும் உயர் நீதி ஆணையின் அடிப்படையில் ஏற்கனவே அரசாணை நிலை எண் 16, ஊரக வளர்ச்சித் துறை நாள்–29.1.98ல் அனுமதிக்கப்பட்ட ஊதிய விகிதத்தில் ஊதியம் வழங்கப்பட வேண்டும்.

உ) ஓய்வூதியப் பயன்கள், முறையான பணியமைப்பின் பாற்பட்ட முழுநேரப் பணியாளர்களுக்கு மட்டுமே அனுமதிக்கப்படுபவை, ஊராட்சி ஒன்றிய ஊரக மருத்துவ அலுவலர் பதவி பகுதி நேரப் பதவி என்பதால் பகுதி நேர ஊரக மருத்துவர்கள் ஓய்வூதியப் பயன்கள் பெறத் தகுதியுடையவர்களல்ல. முறையான பணியமைப்பின் பாற்பட்ட முழுநேர பணியாளர்களுக்கு அளிக்கப்பட்டு வரும் இதர பணிப்பயன்களான தேர்வு நிலை, சிறப்பு நிலை, பணிகளில் இருக்கும் போது காலமானவர்களின் வாரிசுக்கு கருணை அடிப்படையில் பணி வாய்ப்பு, குழு காப்பீடு, வருங்கால வைப்பு நிதி, ஓய்வு பெறும் பொழுது கணக்கில் உள்ள ஈட்டிய விடுப்பு மற்றும் அரைச் சம்பள ஈட்டா விடுப்பு ஆகியவற்றை காசாக்குதல் போன்ற சலுகைகளும் பகுதி நேர ஊரக மருத்துவ அலுவலர்களுக்கு அனுமதிக்க தக்கவை அல்ல.

ஊ) உயர்நீதி மன்ற ஆணைப்படி பகுதிநேர ஊரக மருத்துவர்களுக்கு காலமுறை ஊதியம் வழங்கப்பட்டது. இது தொடர்பாக பகுதி நேர மருந்தகங்களின் பணி நேரத்தை மாற்றி அமைத்து அரசின் முன் அனுமதியின்றி ஊரக வளர்ச்சி இயக்குநர் கடிதம் எண். 106744/98/ஈ3, நாள்–16.3.99ல் வெளியிட்டுள்ள அரசாணை நிலை எண். 246, ஊரக வளர்ச்சி நாள்–15.11.96ல் நிர்ணயிக்கப்பட்ட பகுதி நேர மருந்தகங்களின் பணிநேரத்தை விட மாறுபட்டுள்ளது. எனவே மேலே பத்தி 3(ஆ)க்கு ஏற்ப பகுதி நேர ஊரக மருந்தகங்களின் பணி நேரம் மற்றும் பகுதி நேர ஊரக மருத்துவ அலுவலர்களின் பொறுப்புகள் பற்றி பொது சுகாதாரத் துறை இயக்குநருடன் கலந்து அது குறித்த திருத்திய ஆணைகள் வெளியிட ஊரக வளர்ச்சி இயக்குநருக்கு அதிகாரம் அளிக்கப்படுகின்றது.

எ) ஊராட்சி ஒன்றிய முறையான மருந்தக, மருத்துவ அலுவலர் பதவிக்கும், பகுதி நேர ஊரக மருத்துவ அலுவலர் பதவிக்கும், பணியின் தன்மையின் அடிப்படையில் பட்டமேற்படிப்பு தேவையில்லை. ஏற்கனவே பட்டப் மேற்படிப்புக்கு சென்ற ஊராட்சி ஒன்றிய மருத்துவர்களுக்கு பட்டமேற்படிப்பு காலத்திற்கு உதவித் தொகை(Stipend) மட்டுமே பெற தகுதி உண்டு. உதவித் தொகையினை இவர்கள் பெற வழி உள்ள நிலையில் ஊதிய விகிதத்தின் அடிப்படையிலான ஊதியம் பட்டமேற்படிப்பு காலத்திற்கு (ஊராட்சி ஒன்றியத்தில் பணிபுரியாத காலத்திற்கு) பெறத் தகுதியில்லை.

ஏ) ஊராட்சி ஒன்றிய முறையான மருந்தக மருத்துவ அலுவலர்களாக கிராம பகுதியில் உள்ளவர்களே அந்தந்த பகுதிகளில் பணி நியமனம் செய்யப்படுகின்றனர். மேலும் இவர்களின் பொறுப்புகள், முழு நேர ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவர்கள் மற்றும் அரசு மருத்துவர்களின் பொறுப்புகளை விட மிகவும் குறைவானவை. எனவே இவர்கள் கிராமப்படி (Rural Allowance) மற்றும் தனி ஊதியம் (Persona Pay) போன்றவை பெற தகுதியுடையவர்கள் அல்ல.

4. இந்த அரசாணை அனைத்து ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்களுக்கும் உடனே மாவட்ட ஆட்சியர்கள் அனுப்பி அவர்களின் ஒப்புகை பெற வேண்டும் என்று அறிவுறுத்தப்படுகின்றது.

5. இந்த அரசாணை நிதித் துறையின் அ.சா.எண்.2627/FS/P/2000, நாள்–16.8.2000ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகின்றது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**இரமேஷ் சந்திர பண்டா**
அரசு செயலாளர்